மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.205/2022</u>

2026ம் ஆண்டு ஏப்ரல் 10ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமாரசாமி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>10.04.2026 பி.வா.சா.1 மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். இந்த வழக்கிற்காக கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. 26.09.2022 தேதியிட்ட காங்கயம் காவல் நிலையம் குற்ற எண்.471/2022ன் முதல் தகவல் அறிக்கை கார்பன் நகல் – பி.வா.சா.ஆ.5

2. இந்நீதிமன்றத்தின் அ.வ.எண்.21/2022 வழக்கின் தீர்ப்பாணை மற்றும் தீர்ப்புரை சான்றிட்ட நகல் –பி.வா.சா.ஆ.6

தாவா தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனது பூமி நால்ரோடு கிராமம் குப்பை கவுண்டன் வலசில் உள்ளது என்றால் சரிதான். எனது பூமியின் காலை எண்.883/ஏ 5. இந்த வழக்கில் வாதிகள் என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளார்கள் என்ற

விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து வாதிகள் பூமியில் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் பூமியில் வடக்கோட்டில் கிழமேலாக தடம் உள்ளது என்றால் தடம் இல்லை. வாதிகள் பூமியில் வடக்கோட்டில் கிழமேலாக தடம் உள்ளது என்றும் அதை பற்றி எனக்கு தெரிந்திருந்தும் நான் இல்லை என அழைக்கிறார்கள் பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2. எனது பூமியில் கிழபுரத்தில் தென்வடலாக வாதிகளுக்கு பாதிக்கப்பட்ட தடம் உள்ளது என்றால் தடம் இல்லை எனது பூமியின் கிழபுறத்தில் தென்வடலாக வாதிகளுக்கு தடம்உள்ளது என்றும் அதை தெரிந்தும் நான் இல்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வாதி தரப்பு சான்றாவனம் 1ல் தாவா தடங்களை பொறுத்து தெளிவாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தில் க.ச.எண்.886 காலையில் வடக்கு கோட்டில் கிழமேலாகவும், க.ச.எண்.887 காலையில் மேற்புறத்தில் தென்வடலாகவும் தடம் உள்ளது என்பது தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிழமேல் மற்றும் தென்வடல் தடங்களை வாதிகள் நாளது தேதி வரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அவர்கள் அனுபவிக்கவில்லை.

4. மேற்படித்தடங்களை வாதிகள் அனுபவம் செய்து வருவதற்கான ஆவணங்கள் அனைத்தையும் வாதிகள் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், அந்த விபரங்கள் எனக்கு நன்கு தெரிந்தும் வாதிகள் மேற்படி தடங்களை அனுபவம் செய்து வரவில்லை என நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. க.ச.எண் 886 மற்றும் 887 ஆகிய காலைகளில் எனக்கு எவ்வித பாத்திய உரிமையும் அனுபவமோ இல்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.21/2022 என்ற வழக்கில் எனது பூமியை பொறுத்து மட்டும்தான் எனக்கு தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை நிரூபண வாக்கு மூலத்தில் நடந்து முடிந்த சட்ட மன்ற தேர்தலில் எனக்கும் வாதிகளுக்கும் மனக்கசப்பு இருந்து வருவதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அவர்கள் ஒரு அரசியல் கட்சிக்கும் நான் ஒரு அரசியல் கட்சிக்கும் ஆதரவாக செயல்பட்டோம் என்றால் சரிதான். அந்த மன கசப்பை மனதில் வைத்துக் கொண்டுதான் நான் வாதிகள் மீது இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.21/2022 என்ற வழக்கை பொய்யான சங்கதிகள் கூறி தாக்கல் செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

6. அந்த மனக்கசப்பின் அடிப்படையில் தான் நான் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட தடத்தின் அத்துக்களை அழித்து அந்த தடத்தை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்தேன் என்று சொன்னால் சரியல்ல.

அதேபோல் நான் வாதியின் பூமியில் உள்ள சர்வே அத்துக்கள் ஆகியவற்றை அழிக்க முயற்சி செய்தேன் என்றால் இல்லை அவர்கள் தான் எனது பூமிக்குள் அத்துமீறி வந்தார்கள் கல்லை உடைத்தார்கள். வாதிகள் எனது பூமிக்குள் அத்துமீறி வந்தார்கள் என்றும் கல்லை உடைத்தார்கள் என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

7. வாதிகளை மிரட்டி அடிபணிய வைக்க வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் நான் வாதிகள் மீது பொய்யான புகார்களை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் மீது நான் கொடுத்த புகார் சம்பந்தப்பட்ட வழக்கானது தற்போதும் நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். நான் எனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி வாதிகளை இடையூறு செய்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

8. வாதிகள் அவர்கள் தடத்தை அகலப்படுத்த வேண்டி எனது பூமியை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லி உள்ளேன் என்று சொன்னால் சரியல்ல நான் சொல்லி உள்ளது போல் எனது பூமியின் கிழபுரத்தில் தென்வடலாக முழுஅளவிற்கு கம்பி வேலியும் எனது பூமியின் மேல் புறத்தில் பாதி அளவிற்கு கம்பிவேலியும் பாதி அளவிற்கு கிழுவன் வேலியும் உள்ளதாக நான் எனது வழக்கிற்காக பொய்யாக சொல்லி உள்ளேன். அவ்வாறு எனது பூமியில் எந்த அமைப்புகளும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

9. நான் அசல் வழக்கு எண் 21/2022 வழக்கில் பெற்ற தீர்ப்பானது இந்த வழக்கின் வாதிகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கத்தக்கது அல்ல என்றும் வாதிகள் இந்த வழக்கில் கோரி உள்ளவாறு பரிகாரங்கள் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றும் இந்த வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.04.10 18:25:26 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.